Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 325

சனிக்கிழமை
18 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வடக்கில் மழை தொடரும்!

யாழ்ப்பாணம், ஒக். 18
வடமாகாணத்தில் தற்போது நிலவிவரும் மழையுடனான காலநிலை தொடர்வதற்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், 11

# தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோதம் அல்லவாம்!

### அது பௌத்த நிலம் என்று பௌத்த காங்கிரஸ் கடிதம்

### விகாரைக்குச் சொந்தமான பெருமளவு காணிகள் ஆக்கிரமிப்பு என்றும் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 18**

**தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள பகுதி, தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்துப் பௌத்த நிலம். அது சட்டவிரோதமானது அல்ல. விகாரைக்கு உரிய காணிகளில்தான் தற்போது குடியிருப்புகள் அமைந்துள்ளன - இவ்வாறு இலங்கை பௌத்த காங்கிரஸ் வலி. வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சுகிர்தனுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.** 11



## மீனவர் விவகாரம் தொடர்பில் மோடி - ஹரிணி உரையாடல்!

கொழும்பு, ஒக். 18
இந்திய இலங்கை மீனவர்களின் விவகாரம் தொடர்பில், இந்தியப் பிரதமர் மோடியும் பிரதமர் ஹரிணியும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.
பிரதமர் ஹரிணி மூன்று நாள்கள் பயணமாக இந்தியா 11


## செவ்வந்திக்கு உதவிய பொலிஸ் அதிகாரி கைது

### மேலும் இருவரும் சிக்கினர்

கொழும்பு, ஒக். 18
இஷாரா செவ்வந்தி பொலிஸாரிடம் சிக்காமல் தலைமறைவாக இருப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டில், பொலிஸ் அதிகாரி ஒருவர் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
அத்துடன், மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 11

## தீவிரமடைகின்றது எலிக் காய்ச்சல்!

8,000 பேர் பாதிப்பு விரிவு பக்கம்:- 05



இடிந்துவிழும் நிலையிலுள்ள

## நல்லூர் மந்திரிமனையை பாதுகாக்க நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஒக். 18
இடிந்துவிழும் நிலையில் இருந்த யாழ்ப்பாணம் நல்லூர் மந்திரிமனையைப் பாதுகாப்பதற்கு தொல்பொருள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.
தமிழர் மரபுரிமைச் சின்னமான நல்லூர் மந்திரிமனை 11



## திருக்கேதீச்சர வளைவு உடைப்பு; நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பம்

### நீள்கின்றது குற்றப்பத்திரிகை

மன்னார், ஒக். 18
மன்னார் திருக்கேதீச்சர வளைவு உடைக்கப்பட்டமை தொடர்பில் நேற்று நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்ற நிலையில், குற்றப்பத்திரிகையில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள்காரணமாகவிசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன. 2019ஆம் ஆண்டு மன்னார்திருக்கேதீச்சரவளைவு உடைக்கப்பட்டது. அண்ணளவாக ஆறு வருடங்களுக்குப் பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நேற்று விசாரணைக் 11

சாவகச்சேரியில் விசேட தேடுதல்

## போதைப்பொருளுடன் 10 பேர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 18
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது போதைப் பொருள்களுடன் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாகப் பதவியேற்றுள்ள 11

**முச்சந்தி முரளி**

'இப்பிடியே எல்லாத்தையும் தங்கட என்டு சொல்லிக்கொண்டு அபகரிச்சால் என்னெண்டு தீர்வு வரும்?'



## பேருந்துடன் சைக்கிள் மோதி இளைஞர் ஒருவர் படுகாயம்!

### தும்பளையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 18
பருத்தித்துறை தும்பளை வீதியில் இ.போ.ச. பேருந்துடன், சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில், இளைஞர் ஒருவர் 11

தீபாவளியை முன்னிட்டு

## மதுபானக் கடைகள் வடக்கில் மூடப்படும்

### ஜனாதிபதி அநுர உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 18
தீபாவளியை முன்னிட்டு, வடமாகாணத்தில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றுண்டிச் சாலைக்குத் தண்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 19
வல்வெட்டித்துறையில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் செயற்பட்ட சிற்றுண்டிச் சாலையொன்றுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தால் நேற்று 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-100)

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 17.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4227 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 20 26 44 57 |
| விசேட எழுத்து | G |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 17.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1294 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 16 22 44 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 17.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0253 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 1 9 9 2 |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 17.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0101 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 23 27 |

# போலி வரலாற்றுப் புனைவுகளுடன் குருந்தூர்மலையில் காட்சிப்பலகைகள்

*கட்டமைக்கப்பட்ட இனவழிப்பென ரவிகரன் எம்.பி. காட்டம்*

**முல்லைத்தீவு, ஒக். 18**
**தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைப் பௌத்தவரலாற்றுடனும், பௌத்தவரலாற்று நூலான மகாவம்சத்துடனும் தொடர்புபடுத்திப் போலியான வரலாற்றுத் தகவல்கள் புனையப்பட்ட காட்சிப்பலகைகள் குருந்தூர்மலைப்பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தொல்லியல் திணைக்களத்தின் இத்தகைய கட்டமைக்கப்பட்ட தமிழ் இனவழிப்புச் செயற்பாடு கண்டிக்கத்தக்கது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
குருந்தூர்மலையில் சில விளம்பரப்பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல் கிடைக்கப்பெற்றது. அதற்கமையவே இப்பகுதிக்கு வருகைதந்தேன். ஏற்கனவே தமிழர்களின் பூர்வீக குருந்தூர் மலையைப் பௌத்த இடமென விவரிக்கும்வகையில் காட்சிப்பலகைகள் குருந்தூர்மலை அடிவாரத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.
"குருண்டி தொல்லியல் தளம்" எனத் தலைப்பிடப்பட்டு போலியான பௌத்த வரலாறுகள் புனையப்பட்ட காட்சிப்பலகைகள் தொல்லியல் திணைக்களத்தினால் குருந்தூர்மலையின் அடிவாரம், குருந்தூர்மலையின் மேற்பகுதி மற்றும் குருந்தூர்மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமாக மொத்தம் நான்கு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இவ்வாறான போலியான வரலாற்றுப் புனைவுகளை இங்கு நிறுவுவதை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.
குறிப்பாக எமது தமிழ் மக்கள் இந்தக் குருந்தூர்மலையை அண்டியுள்ள தண்ணிமுறிப்புப் பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்து வந்ததுடன், இந்தக் குருந்தூர் மலையில் அமைந்திருந்த ஆதிசிவன் ஐயனாரை வழிபட்டுவந்துள்ளனர். இதுவே தண்ணிமுறிப்பினதும் குருந்தூர் மலையினதும் வரலாறாக இருக்கின்றது. இந்தத் தண்ணிமுறிப்புப் பகுதியில் பூர்வீகக் குடிகளாக வாழ்ந்த எமது தமிழ் மக்கள் இன்னும் மீளக்குடியமர்த்தப்படவில்லை.
இத்தகைய சூழலில் தமிழர்களுடைய பூர்வீக வாழிடமான தண்ணிமுறிப்பையும், குருந்தூர் மலையையும் மகாவம்சத்துடனும், பௌத்த வரலாறுகளுடனும் தொடர்புபடுத்தி தொல்லியல் திணைக்களத்தினால் போலியானதொரு வரலாறு புனையப்பட்டு காட்சிப்பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
தொல்லியல் திணைக்களமென்றால் இந்தநாட்டில் சிங்களமக்கள், தமிழ்மக்களென்ற வேறுபாடின்றி வரலாறுகளை ஆராய்ந்து உண்மையான வரலாறுகளைப் பதிவுசெய்யவேண்டும். ஆனால் இலங்கையிலுள்ள தொல்லியல் திணைக்களம் பௌத்தர்களுக்கு சார்பாக போலியான வரலாற்று புனைகதைகளை உருவாக்குவது மற்றும் காட்சிப்படுத்துகின்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கின்றது.
இது எம்மீது கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடே.
தொல்லியல் திணைக்களம் போலியாக வரலாறுகளைப் புனைந்துள்ள மகாவம்சக் காலத்திற்கு முன்பிருந்தே எமது தமிழர்கள் ஆண்ட இடங்களாக இந்த இடங்கள்காணப்படுகின்றன. போலியான வரலாறுகளைப் புனைந்து தமிழர்களின் பூர்வீக வரலாற்றிடங்களைத் திட்டமிட்டு ஆக்கிரமிப்புச்செய்வதை ஒருபோதும்எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது- என்றார். (ச-246, 26)

**சுபிரி தன சம்பத** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 17.10.2025 | வெள்ளிக்கிழமை | 0693 | M | 0 7 1 1 5 8 |

**Super Ball** (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 17.10.2025 | வெள்ளிக்கிழமை | 2959 | F | 15 41 56 78 |

**சனிதா** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 17.10.2025 | வெள்ளிக்கிழமை | W | 18 46 53 68 | 5020 |

**SASIRI** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 17.10.2025 | வெள்ளிக்கிழமை | 0793 | 12 25 49 |

**லக்ன ராசி** (DLB)

| திகதி | தினம் | மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 17.10.2025 | வெள்ளிக்கிழமை | ♊ | 05 23 49 62 | 4671 |

**KAPRUKA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 17.10.2025 | வெள்ளிக்கிழமை | T | 32 | 11 14 16 38 | 2135 |

**அத கோடிபதி** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 17.10.2025 | வெள்ளிக்கிழமை | L | 11 13 18 19 | 2785 |

**JAYODA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 15.10.2025 | புதன்கிழமை | I | 14 16 19 47 | 2170 |

# சட்டத்துக்கு முன்னால் ஓட, ஒளிய முடியாது!



*அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 18
உலகில் எந்த மூலையில் பதுங்கி இருந்தாலும் தவறிழைத்தவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவேமுடியாது. பாதாளக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் மாபியாக்களுக்கு முடிவு கட்டப்பட்டுவருகின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பாதாளக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு முடிவு கட்டப்படும் என நாம் உறுதியளித்திருந்தோம். இதற்காகப் பொலிஸார் உட்பட பாதுகாப்புத் துறையினருக்குத் தேவையான வளங்களை வழங்கினோம். அவர்கள் சிறப்பாகத் தமது கடமைகளைச் செயற்படுத்தி வருகின்றனர். செவ்வந்தி உள்ளிட்டவர்களைப் பிடிப்பதற்குக்கூடத் தெம்பு இல்லை எனவும் எதிரணிகள் கூச்சலிட்டன. ஆனால் சட்டத்தின் பிடியில் இருந்துதப்பமுடியாது என்பதை நாம் நிரூபணமாக்கியுள்ளோம். கடந்தகாலங்களில்தான் குற்றவாளிகள் அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்பட்டனர். ஆனால் எமது ஆட்சியில் குற்றவாளிகளுக்கு இடமில்லை- என்றார். (ந-26)

## வல்வெட்டித்துறைப் படுகொலை இழப்பீட்டு அறிக்கை வெளியீடு

இந்திய அமைதிகாக்கும் படையினரால் நிகழ்த்தப்பட்ட வல்வெட்டித்துறைப் படுகொலைச் சம்பவத்தின் போதான இழப்புகளுக்கான இழப்பீட்டு அறிக்கை வெளியீடு மற்றும் "வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்" நூல் வெளியீடு ஆகிய நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி ஊடக இல்லத்தில்காலை9.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (க-25, 100)

# தீபாவளிக்காக கடைகள் திறப்பு

*யாழ்ப்பாணம், ஒக்.18*
தீபாவளியை முன்னிட்டு பருத்தித்துறை நகரில் நாளை ஞாயிற்றுக்கிழமை கடைகளைத் திறப்பதற்கு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அனுமதி வழங்கியுள் ளது.
வர்த்தகர்களது கோரிக்கைக்கு அமைவாக தினசரி இரவு 10 மணியுடன் வியாபார நடவடிக்கைகளை நிறுத்தும் தீர்மானத்துக்கு திங்கட்கிழமை வரை விலக்களிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிதத்துள்ள வர்த்தக சங்கம், இந்த விலக்களிப்புகள் தீபாவளி தினத்துடன் முடிவுக்கு வருவதுடன், எதிர்வரும் 26ஆம் திகதி முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் கட்டாய விடுமுறைத் தீர்மானம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப் படும் எனவும் தெரிவித்துள்ளது. (எ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனையில் விடுபடும் போக்கை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

**கொழும்பு, ஒக்.18**

**இலங்கையில் தண்டனைகளில் இருந்து விடுபடும் போக்கு மற்றும் குற்றவாளிகள் கொண்டாடப்படும் கலாசாரம் என்பன முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இடைக்கால நிறைவேற்றுப்பணிப்பாளர் பெடெரிக்கோ பொரெல்லோ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின்போது இலங்கை அரசாங்கம் வாக்கெடுப்புக் கோராமையை வரவேற்கின்றோம்.

அதேவேளை, வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் உள்ளடங்கலாக மீறல்கள் பற்றிய உண்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும். அவற்றைத் தெரிந்துகொள்வதற்கான உரிமை அவர்களது உறவினர்களுக்கு உண்டு. மீறல்கள் மற்றும் ஒடுக்குமுறைகள் மூலம் உலகநாடுகள் தமது அதிகாரத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்திக்கொள்ளும் போக்கை அவதானிக்க முடிகின்றது. அமெரிக்கா அதற்கு ஆதரவாகச் செயற்படுகின்றது. அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இலங்கையில் 2022ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற பொருளாதார நெருக்கடியை அடுத்து உருவான அரகலயப் போராட்டத்தின் ஊடாக மேற்குறிப்பிட்ட போக்குகளைத் தம்மால் ஏற்கமுடியாது என மக்கள் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறான கட்டமைப்பை நேர்த்தியான புதியதொரு கட்டமைப்பின் ஊடாகப் பதிலீடு செய்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு உண்டு - என்றார். (எ-இ)



முல்லைத்தீவு மாவட்ட

## மேலதிகச் செயலராக மஞ்சுளாதேவி நியமனம்

முல்லைத்தீவு, ஒக்.18

முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலராக திருமதி மஞ்சுளாதேவி சதீஸன் கடந்த புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அதற்கமைய இவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் முதலாவது பெண் மேலதிகச் செயலராக உள்ளார். இவர் முன்பதாக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலராகப் பணியாற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25, 9)

## போதைப்பொருள்களுடன் கொக்குவிலில் ஒருவர் கைது


யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ்.கொக்குவில் பகுதியில் போதை மாத்திரைகள் மற்றும் ஹெரோய்ன் ஆகிய போதைப்பொருள்களுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமாகாண சிரேஷ்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தனபாலவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுக் குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். 41 வயதுடைய குறித்த சந்தேகநபரிடமிருந்து 10 போதைமாத்திரைகளும் 6 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-23)



## தங்கத்தின் விலை ரூ.4 இலட்சம் கடந்தது



கொழும்பு, ஒக். 18

இலங்கை வரலாற்றில் 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை நேற்று 4 லட்சம் ரூபாவைக் கடந்துள்ளது. இதன்படி 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 4 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக தங்கச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நேற்றுமுன்தினத்துடன் ஒப்பிடுகையில் அதன் விலை நேற்று 15 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. இதேவேளை, 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை நேற்று 13 ஆயிரத்து 800 ரூபா அதிகரித்து 379 ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (ச-இ)

## போதைமாத்திரைகளுடன் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக்.18

வல்வெட்டித்துறை சமரபாகு என்ற இடத்தில் போதைமாத்திரைகளோடு இளைஞர்கள் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். காங்கேசன்துறை மாவட்டப் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினர் நடத்திய சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைதாகினர்.

17 மற்றும் 18 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-23)




## பள்ளிக்கூடத்தில பிக்பாஸ்

இந்தமுறை பிக்பாஸ் நிகழ்ச்சியை ரீவியில கனபேர் பார்த்திருப்பியள். வழக்கத்தைவிட இந்தமுறை அந்த நிகழ்ச்சியில ஒரு மாற்றம். அங்க இப்ப ரண்டு வீடு. ஒண்டில இருக்கிறவைக்குக் கூடப் பவர் இருக்கு. அவை ஒரு வேலையும் செய்யத் தேவையில்லை, நித்திரையால வேளைக்கு எழும்பத் தேவையில்லை, சமைக்கத் தேவையில்லை, வீட்டைக் கூட்டத் தேவையில்லை. கிட்டத்தட்ட அவை ஒரு ராஜ குடும்பத்தைப் போல இருக்கலாம். ஆனால் மற்ற வீட்டில இருக்கிறவையின்ர நிலைப்பாடு இதுக்கு நேர்மாறு. அவைதான் அடிமையள் மாதிரி, எல்லா வேலையும் செய்யோணும். வீடுகூட்டினாலென்ன, சட்டிபானை கழுவினாலென்ன, சமைச்சாலென்ன, ரொய்லெட் கிளீன் பண்ணினாலென்ன எல்லாம் இவைதான். ராஜபோக வாழ்க்கை வாழுற வீட்டுக்காரர், அடிமையள் மாதிரி இருக்கிறவைக்கு ஓர்டர் போட்டு, தாங்கள் நினைச்சபடி வேலை வாங்குகினம். இப்ப ஏன் பிக்பாஸ் நிகழ்ச்சியை இவ்வளவு விலாவாரியா பட்சி சொல்லுதெண்டு சிலருக்கு டவுட்டா இருக்கலாம். அதுக்குக் காரணமிருக்கு.

சில பள்ளிக்கூடங்களிலையும் உந்த பிக்பாஸில நடக்கிறமாதிரி, ரீச்சர்மார் தங்களை ஏதோ அரச குடும்பத்து ஆக்கள் போல நினைச்சுக்கொண்டு பள்ளிக்கூடப்பிள்ளையளை வைச்சு வேலை வாங்குகினம் எண்டு சொல்லுப்படுகுது. அதுவும் தென்மராட்சியில சந்திரன் உதிக்கிற பள்ளிக்கூடத்தில இந்த வேலைவாங்கிற விளையாட்டு எல்லைமீறிப் போகுதெண்டு பெற்றார் ஆதங்கப்படுகினம். அந்தப் பள்ளிக்கூடத்தில இருக்கிற, ரீச்சர்மார் மட்டும் பாவிக்கிற ரொய்லெட்டை ஒவ்வொருநாளும், ஒவ்வொரு வகுப்புப் பிள்ளையள் கிளீன் பண்ண வேணும் எண்டு ஓர்டர் போடுப்பட்டிருக்காம். பிள்ளையளைவைச்சு வகுப்பறையைக் கூட்டுவிக்கலாம், கிரவுண்டில இருக்கிற குப்பைகூழங்களை அள்ளுவிக்கலாம். ஆனால் அந்தப் பிள்ளையளை இப்பிடி ரீச்சர்மார் பாவிக்கிற ரொய்லெட்டைக் கிளீன் பண்ணச் சொல்லுறது எவ்வளவு மோசமான வேலை?

ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் பியோன் இருப்பினம். அவையை வைச்சு இந்த வேலையைச் செய்விச்சிருக்கலாம். ஆனால் அவையும் "இது எங்கட டியூட்டி இல்லை" எண்டு முகத்துக்கு நேர சொல்லிப்போடுவினம். அப்பிடியெண்டால் வெளியில இருந்து ஒரு வேலையாளுக்குச் சம்பளம் குடுத்து அந்த ரொய்லெட்டைக் கிளீன் பண்ணி இருக்கலாம். அதுவுமில்லாட்டி ரீச்சர்மாரே தங்களுக்குள்ள ஒரு ரொட்டேசனில அதைக் கிளீன் பண்ணலாம். அதுகளை விட்டுப்போட்டு, சின்னப் பிள்ளையளைக் கொண்டு, இப்பிடி ரொய்லெட்டைக் கிளீன் பண்ண வைக்க எப்பிடித்தான் மனம் வருகுதோ? "தங்கட வீட்டுப் பிள்ளையளை அவையள் இப்பிடி ரொய்லெட்டைக் கழுவ விடுவினமோ?" எண்டு பெற்றார் கோபமாக் கேக்கினம். அந்தக் கேள்வியிலை முழுநியாயம் இருக்கு. தென்மராட்சி வலயக்காரர் ஒருக்கா இந்த விசயத்தைக் கவனிச்சாலென்ன?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.18

தமிழ்மொழி மூலம் சிறுவர்களுக்கான நூல்களை எழுதி வெளிக்கொண்டுவந்த சிறுவர் இலக்கிய எழுத்தாளர்கள் அனைவரையும் இணைத்து பகிர்தலும் பரவலாக்கலும் எனும் முழுநாள் நிகழ்வு சுழிபுரத்திலுள்ள கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 4மணி வரை இடம்பெறவுள்ளது.

இதன்போது சிறுவர்களுக்கான நவீன தொழினுட்பங்களை உள்ளடக்கிய பிரத்தியேக நூலகம் திறப்புவிழாவும், சிறுவர் நூல்கள் வெளியீடும், கண்காட்சியும், அனைத்துச் சிறுவர் இலக்கியம் படைத்த ஆளுமைகளின் தகவல்களை ஒன்றுதிரட்டி ஒரு காத்திரமான கையேடு வெளியீடும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனுபவ எழுத்தாளர்களான திக்குவல்லை கமால், ச.அருளானந்தன், ஓ.கே.குணநாதன், அகளங்கன், கோகிலா மகேந்திரன் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

# கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த வலுவான பொறிமுறை உருவாக்குக

## வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஒக். 18

மக்களுக்குத் தொடர் தொல்லையாக இருக்கும் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த வலுவான பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துவது அவசியம் என்று வேலணை பிரதேசசபையின் உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த் வலியுறுத்தியுள்ளார். வேலணைப்பிரதேசசபையின் மாதாந்த அமர்வு அண்மையில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பெரும்போகச் செய்கைக்கு மட்டுமல்லாது மக்களுக்கு நாளாந்தம் பெரும் அசௌகரியத்தைக் கால்நடைகள் ஏற்படுத்திவருகின்றன. தற்போது பருவகால மழையுடன், பெரும்போக விவசாய நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ள நிலையில் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் ஒவ்வொரு பிரதேசசபைகளும் சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளன. அதன் அடிப்படையில் எமது சபையும் குறித்த நடவடிக்கையை முன்னெடுத்து கட்டாக்காலிகளால் ஏற்படும் பாதிப்புகளை கட்டுப்படுத்துவது அவசியம். இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதனூடாக விவசாயப் பயிர்ப்பாதுகாப்பு, விபத்துகளைக் குறைத்தல், பொதுச்சுகாதாரத்தைப் பாதுகாத்தல், போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்தல் ஆகியவற்றுடன் விலங்குகளின் நலனையும் உறுதிசெய்யமுடியும் - என்றார். (ச-27)

**கண்ணீர் அஞ்சலி**

தோற்றம் 10 . 07 . 1950



மறைவு 17 . 10 . 2025

**நித்தியானந்தன் தவமணி**

கரணவாய் மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நித்தியானந்தன் தவமணி அவர்கள் நேற்று (17.10. 2025) காலமானார். இவர் காலஞ்சென்ற க. நித்தியானந்தன் அவர்களின் மனைவியும், அ. சோபினியின் (ஆசிரியை) தாயாரும், வி.சரசலோசனா, க. தில்லைநாயகம் ஆகியோரின் சகோதரியும், யோ.அருணின் (எடிட்டர்) மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிறு (19. 10. 2025) காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தார்

**Win's Repair**

குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித்தருகிறோம்.

தொடர்புகளுக்கு:-
076 834 6136

(CS4093) J-1

**மணல் விற்பனைக்கு**

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.

| | |
|---|---|
| தென்மராட்சி | 50,000/= |
| யாழ். மாவட்டம் | 55,000/= |
| வடமராட்சி | 55,000/= |

விநியோகிக்கப்படும்.

மற்றும்

கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டுத் தரப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**077 057 0337**

# சபை வாகனங்களுக்காக அதிக நிதி வீண்விரயம்

## வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

*யாழ்ப்பாணம், ஒக்.18*

*வேலணைப் பிரதேசசபையால் வாகனத் திருத்தங்களுக்கும் அதனை ஒத்த தேவைகளுக்குமாக அதிகளவில் நிதி செலவிடப்பட்டு வீண்விரயமாக்கப்படுகின்றது. மக்களின் நலன்களுக்குச் செலவிடப்படும் நிதி மிகக் குறைவாகவே இருக்கின்றது என வேலணைப் பிரதேச சபையின் உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் குற்றஞ்சுமத்தியுள்ளார். வேலணைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு அண்மையில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். வேலணைப் பிரதேசசபை வருமானம் குறைந்த ஒரு சபையாகும். மிக நெருக்கடிகளைச் சந்தித்தே நிதி வருவாய்கள் திரட்டப்படுகின்றன. அந்த நிதிகூட மக்களின் தேவைகளை விட வாகனங்களின் நலன்களுக்காகவே செலவிடப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25-20-27)*

**மரண அறிவித்தல்**

பிறப்பு 30 . 09 . 1946

இறப்பு 09 . 10 . 2025



**சின்னராசா (சின்னக்கிளி) வாமதேவி**

**(ஸ்ரீதரன் விளையாட்டுக்கழக உரிமையாளரின் மனைவி)**

அன்னார் அமரர்களான சின்னப்பு-சிவக்கொழுந்து தம்பதியரின் மகளும், அமரர்களான சின்னத்தம்பி - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும், அமரர் சின்னராசா (சின்னக்கிளி) அவர்களின் மனைவியும், பத்மநாதனின் சகோதரியும், கமலாதேவி, கந்தசாமி, சரஸ்வதி, பவளம் ஆகியோரின் மைத்துனியும், அமரர் கிரிஜா, இந்திராகாந்தி, சித்திரா, ஸ்ரீதரன், அமரர் கிரிதரன், அமரர் சசி, ராஜினி, வனஜா ஆகியோரின் தாயாரும், சின்னராசா, அமரர் மகேந்திரராசா, கலாவதி, செல்வபாலசிங்கம், குலேந்திரராசா (ராஜா), தனுஜா ஆகியோரின் மாமியாரும், இனோசன், றெனுயன், சுவேத்தா, சுரேக்கா, டிலக்ஷன், பார்த்தீபன், சிவறூபன், கஜறூபன், தேனுயன், அகீபன், துவாரகா, ஆபரணா, அபி, ஆதி ஆகியோரின் பேர்த்தியும், ஸஸ்ரிகனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**169, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**ஸ்ரீதரன் (மகன்) - 077 4924 596**
**074 1383 394, 076 860 7132**

தகவல்
குடும்பத்தினர்.

(CS30614) A

**மரண அறிவித்தல்**

பிறப்பு 20 . 09 . 1947



இறப்பு 17 . 10 . 2025

**சின்னத்தம்பி இரத்தினசிங்கம்**

அச்சுவேலி தெற்கு நாவலம்பதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம் அவர்கள் (17.10.2025) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செம்பி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - கனகம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், சந்திரகுமார் (அருணகிரி), இந்திரகுமார் (அருணன்), லிங்கேஸ்வரி, சௌந்தரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவபுண்ணியம், முத்துலிங்கம், செல்லம்மா மற்றும் தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மற்றும் பாமா, உதயகுமார், அனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலக்சன், லதுசன், டிலோஜினி, குருபரன், புருசோத்மன், யதுர்சிகா, சஜீபவன், அநந்ியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி, தெற்கு
நாவலம்பதி.

தகவல்:
குடும்பத்தினர்
077 525 0825
077 645 2224

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# பாடாய்ப்படும் '13'

'அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் இலங்கையின் ஒற்றையாட்சிக்கட்டமைப்பு இல்லாதொழிந்து கூட்டாட்சி நிலைபெறும். இது வடமாகாணம் தன்னிச்சையாகச் செயற்படவும், தற்துணிவுடன் தீர்மானங்களை மேற்கொள்ளவும் காரணமாக அமையும்' என்றவாறாகக் கூறியிருக்கின்றார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் காலத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவருமான சரத் வீரசேகர. 13ஆவது திருத்தத்தின்மூலம் இலங்கையில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மிகக்குறைந்தவை. லண்டன் நகரசபைக்கு உள்ள அதிகாரம்கூட இலங்கை மாகாண சபைக்கு இல்லை. ஆதலால்தான், இந்தத் திருத்தத்தைத் தமது தீர்வாக மட்டுமல்லாமல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாக ஏற்பதற்குக்கூட தமிழர்கள் தயாராக இல்லை. இவ்வாறான நிலையில்தான், 13ஆவது திருத்தத்தால் தமிழீழம் மலர்ந்துவிடும் என்பதைப் போன்று பதறித் துடித்திருக்கின்றார் வீரசேகர.

வீரசேகர இனவாதக் கருத்துகளை வெளிப்படுத்துவது ஒன்றும் புதிதல்ல. அவரின் அரசியலும் வாக்கு வங்கியும் இதுதான். ஆதலால், வீரசேகரவின் கருத்துகளில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. ஆனால், வீரவன்ஸ, உதய கம்மன்பில, சரத் வீரசேகர போன்றவர்களும், அவர்களின் இத்தகைய கருத்துகளும்தான் இலங்கையில் இனவாதக் குருதிச்சகதி பெருக்கெடுப்பதற்கும் -அது இன்றளவும் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருப்பதற்கும் பிரதான காரணங்கள். இவர்களிடத்தில் ஓர் ஆத்மார்த்தமான மாற்றம் ஏற்பட்டிருந்தால், இந்த நாடு அமைதியைக் கண்டடைந்து ஒரு தசாப்தம் தாண்டியிருக்கும். ஆதலால், இந்த எதிர்ப்பை அவர்கள் வெளிப்படுத்தும் கருத்தால் ஒன்றும் நடக்காது எனவும் புறமொதுக்கிவிடமுடியாது. ஏனெனில், தமிழர்களுக்குத் தீர்வை வழங்குவதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் இறுதியில் ஓர் அடிமட்ட அரசியல் மூலமாக அந்த நடவடிக்கைகளுக்குத் தடைபோடப்போகின்றவர்களும் இவர்களே.


இந்த நாட்டைப் பொறுத்தவரையில் இனவாதம் என்பது இலகுவாகப் புரியும் மொழி. அந்த இனவாதம்தான் நூற்றாண்டுகாலப் பொருளாதாரப் பின்னடைவுக்குள்ளும் வரலாற்றுப் பேரழிவுக்குள்ளும் இலங்கையைத் தள்ளியது. இவற்றையெல்லாம் தாண்டித்தான், தமிழர்கள் தமக்கான விடிவைக் கண்டடைய வேண்டியிருக்கின்றது. நாள்கள் இன்னுமின்னும் உருண்டோடினால், 13ஆவது திருத்தத்தில் உள்ள அம்சங்கள்கூட இல்லாதுபோகும் சாத்தியங்கள் தென்பட ஆரம்பித்திருக்கின்றன. 13ஆவது திருத்தம் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை எனும்போது, அதிலுள்ள அதிகாரங்களைக்கூட பிடுங்கியெடுத்துவிட்டு அதன் பின்னர் தீர்வாக ஏதோவொன்றைத் திணிப்பதையோ அல்லது 13ஆவது திருத்தத்தை மையப்படுத்திய வேறுவடிவிலான ஒற்றையாட்சிக் கட்டமைப்பையோ தமிழர்கள் ஒருபோதும் தீர்வாக ஏற்கப்போவதில்லை. இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13ஆவது திருத்தத்தை இந்தியா கொண்டுவந்திருந்த போதிலும், அதை இப்போதும் இந்தியா - இலங்கை இடையிலான விவகாரமாகக் கொள்ளுதல் தகாது. பிராந்திய நலன்களுக்கும் அப்பாற்பட்டு சர்வதேச விவகாரமாக 13ஆவது திருத்தம் மாற்றம்பெற்று நெடுநாள்களாகி விட்டன. 13ஆவது திருத்தத்தைத் தமிழர்கள் ஏற்கின்றனரா அல்லது மறுக்கின்றனரா என்பதற்கு அப்பால், அதைக்கூட சாத்தியப்படுத்த சர்வதேசத்தால் முடியவில்லை என்பதே இங்கு விடயம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

அறிவு சக்தி என்றால், நமக்குத் தெரியாததை அறிவது ஞானம்.

-ஆடம் கிராண்ட்-



# தீவிரமடைகிறது எலிக்காய்ச்சல்!



## 8,000 பேர் பதிவு

கொழும்பு, ஒக். 18

**சீரற்ற காலநிலை காரணமாக, நாட்டின் பல பகுதிகளில் எலிக்காய்ச்சல் வேகமாகப் பரவிவருகின்றது. இதுவரை சுமார் 8,000 நோயாளிகள் இந்த எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் எதிர்காலத்தில் இந்த நிலைமை மோசமடையக்கூடும் .

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10 ஆயிரம் டெங்கு நோயாளிகள் பதிவாகின்றனர். 100-200 இறப்புகள் பதிவாகின்றன. இரத்தினபுரி, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, அநுராதபுரம், பொலநறுவை, கேகாலை, குருநாகல் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்கள் எலிக்காய்ச்சல் அபாயம் கொண்ட மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆபத்தான வேலைகளில் ஈடுபடுபவர்கள் காய்ச்சல், உடல்வலி மற்றும் கண்கள் சிவத்தல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும் .

அறிகுறிகள் தோன்றிய பிறகும் தாமதமாக மருத்துவமனையில் சேர்க்கப்படுவதால் ரேபிஸ் காரணமாக இறப்புகள் நிகழ்கின்றன என்றும் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# மஹாபொலவுக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் நீடிப்பு

கொழும்பு, ஒக். 18

பல்கலைக்கழக மாணவர்கள் மஹாபொல புலமைப் பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பிப்பதற்குரிய கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 2024/2025ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழகத்துக்குத் தகுதிபெற்ற மாணவர்களுக்குரிய மஹாபொல புலமைப்பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பிப்பதற்குரிய கால அவகாசமே நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதி வரை விண்ணப்பிக்கமுடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

# தீபாவளியை முன்னிட்டு விசேட பேருந்து சேவை

கொழும்பு, ஒக். 18

தீபாவளியை முன்னிட்டு பயணிகளின் தேவையைப் பூர்த்திசெய்யும்வகையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சிறப்பு பஸ் சேவைகளை நேற்றுமுதல் ஆரம்பித்துள்ளது.

அனைத்துப் போக்குவரத்து ஏற்பாடுகளும் கொழும்பில் உள்ள பஸ்டியன் மாவத்தை பஸ் நிலையத்திலிருந்து ஒருங்கிணைக்கப்படும்.

குறிப்பாக ஹற்றன், வெலிமடை, பதுளை, பசறை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பாதைகளில் அதிகளவு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இலஞ்சம் பெற்ற அரச அதிகாரி கைது

அரச காணியின் ஒரு பகுதியை பயிர்ச்செய்கைக்கு வழங்குவதற்காக ஒருவரிடமிருந்து 1.2 மில்லியன் ரூபாவை இலஞ்சமாகக் கோரிப் பெற்ற குற்றச்சாட்டில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் இலஞ்சஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டார். மஹவப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. (ச-இ)



# ஹெரோய்ன் விற்பனை: இரு இளைஞர்கள் கைது

அநுராதபுரம், ஒக். 18

அநுராதபுரம் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இருவரைக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய யாழ்ப்பாணம் கண்டி ஏ-9 பிரதான வீதியின் அநுராதபுரம் கல்குளம் பகுதியில் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - ஐப்பசி 2
19.10.2025
சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02 - 10.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் துறைமுகப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகள் நிறைவு

## பகுப்பாய்வுக்கு அனுப்ப மன்று உத்தரவு

கொழும்பு, ஒக்.18

கொழும்புத் துறைமுகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழியின் அகழ்வு ஆய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்துள் ளன என்று நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் உயர்பாதுகாப்பு வலயத்தில் இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. இதுதொடர்பான வழக்கு கடந்த 13ஆம் திகதி கொழும்பு நீதவான் கசுன் காஞ்சன திசாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புகள் தொடர்பான பகுப்பாய்வை ஆரம்பிக்குமாறு விசேட சட்ட மருத்துவ அதிகாரி சுனில் ஹேவகேவுக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். அகழ்வில் மீட்கப்பட்ட குறைந்தது 106 பேரின் மனித எலும்புகள் ஏற்கனவே குற்றக்காட்சி விசாரணைப் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. அவை எதிர்காலத்தில் நீதிமன்றம் மூலம் பகுப்பாய்வுக்காக ஒப்படைக்கப்பட உள்ளன. இந்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 28ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. கொழும்புத் துறைமுகத்திற்குச் செல்லும் புதிய அதிவேக வீதியை நிர்மாணிப்பதற்காக பூமியைத் அகழ்ந்தபோது 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆம் திகதி அங்குள்ள பழைய செயலக வளாகத்தில் மனித எலும்புக்கூடுகள் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டன. இதுதொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டு, கொழும்பு புதுக்கடை மேலதிக நீதவான் பண்டார இலங்கசிங்கவின் உத்தரவின் பேரில் 2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி அகழ்வாய்வுப் பணிகள் ஆரம்பமாகின. அந்த மனிதப் புதைகுழியிலிருந்து குறைந்தது 106 பேரின் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது நாட்டின் நான்காவது பெரிய மனிதப் புதைகுழியாக பதிவாகியுள்ளது. (எ-இ)

**வேலை ஆட்கள் தேவை**

பருத்தித்துறையில் அமைந்துள்ள வணிக விற்பனை நிலையம் ஒன்றினை முகாமைத்துவம் செய்வதற்கு அரச, தனியார் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற வேலையாட்கள் தேவை

தொடர்பு: 076 333 0015

(CS 30477) E

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2026 ஆம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடம் என்பனவற்றை 2026.01.01ஆம் திகதி தொடக்கம் 2026.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 18.10.2025 – 28.10.2025 பி.ப 12.30 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 29.10.2025 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 29.10.2025 பி.ப 2.30 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்:

| தொ இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT, NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT தவிர) | மாத வாடகை (VAT, NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 1 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 280,500.00 | 250.00 |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 45,600.00 | 250.00 |
| 3 | கோழி உரித்தல் கடை இல.05 | 750.00 | 7,500.00 | 226,125.00 | 250.00 |
| 4 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 220,000.00 | 250.00 |
| 5 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 57,000.00 | |
| 6 | ஆலடிச்சந்தை | 750.00 | 7,500.00 | 106,400.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 263,150.00 | 250.00 |
| 2 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 75,571.50 | |
| 3 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 54,650.00 | |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 351,000.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 36,600.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு மரக்கறி சந்தை | 750.00 | 7,500.00 | 72,000.00 | |
| 4 | ஏழாலை மயிலங்காடு மீன்சந்தை | 750.00 | 7,500.00 | 72,000.00 | |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடம் என்பவற்றிற்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2025.11.11ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. அரசினால் வரி விதிக்கப்படும் பட்சத்தில் அத்தொகையும் செலுத்தப்படவேண்டும்
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
7. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை "**தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை "**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்**" எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
14. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
15. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தி.பிரகாஷ்**
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

18.10.2025

(CR 46[illegible]3) A

## கண்ணீர் அஞ்சலி



அமரர் **பாலசிங்கம் யோகம்மா**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 25.01.1936 மறைவு 12.10.2025

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.


துயரில் பங்குகொள்ளும்
ஆலய பரிபாலன சபையினர்
[illegible] மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.

(CR/43605) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 • 10 • 1951

மறைவு 17 • 10 • 2024



அமரர்

## நைல்ஸ் ஞானரட்ணம்

அத்தானே !

உங்கள் உயிர் என்னைவிட்டு
அறுநூறு காதங்கள் பிரிந்தே செல்லும்
பித்தான என் நெஞ்சம் பெண்ணாய் வந்த
பிறப்பெண்ணி தினம் நோகும் வதங்கிப்
போகும் சத்தான உடல் குறையும்
தனிமை நோய்தகன் என்னைத்
துயர்க் கடலில் தள்ளும்.

ஏசாயா 54:7
இம்மைப் பொழுது உன்னை
கைவிட்டேன் ஆனாலும்
உருக்கமான இரக்கங்களால்
உன்னைச் சேர்த்துக் கொள்ளுவேன்.

துயர் கடலில்
மூழ்கி நிற்கும்
உங்கள் மனைவி

(CS 59660) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதபாட ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.18

தரம் 6 இற்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி மறுசீரமைப்புத் தொடர்பான கணிதபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் முறையே புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணி வரை நடைபெறவுள்ளது. செயலமர்வில் பங்குபற்றாத ஆசிரியர்களுக்கு 2026ஆம் ஆண்டு தரம் 6 இற்கு கல்வி கற்பிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதால் செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக்கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (ச-25)

## 12 இலட்சம் குடும்பங்களை வலுப்படுத்த புதிய திட்டம்

கொழும்பு, ஒக்.18

**அஸ்வெசும நலன்புரி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வறுமை மற்றும் தீவிர வறுமைக்குட்பட்ட12 இலட்சம் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான விசேட திட்டங்களை முன்னெடுப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

வறுமை மற்றும் தீவிர வறுமைக்குட்பட்ட12 இலட்சம் குடும்பங்களை வலுவூட்டுவதற்கான பொறுப்பு சமுர்த்தித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் நிதி மற்றும் ஒத்துழைப்பு களின் பிரகாரம் இரு முன்னோடிக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அவை செயற்படுத்தப்படவுள்ளன.

முன்னோடிக் கருத்திட்டங்களின் பொறிமுறைக்கமைய அடையாளங்காணப்பட்ட வறுமை மற்றும் தீவிர வறுமைக்குடும்ப அலகொன்றுக்கு அவர்களின் வியாபாரம் அல்லது மற்றும் தொழில் திட்டங்களின் அடிப்படையிலும், அவர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா உயர்ந்தபட்ச தொகைக்கமைய நிதியுதவி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (எ-இ)


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

### FACULTY OF MEDICINE

**Senior Professor / Professor of** Anatomy/ Parasitology / Pharmacology / Community and Family Medicine / Surgery

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary) in** Biochemistry/ Community & Family Medicine/ Microbiology/ Parasitology/ Forensic Medicine/ Pathology / Psychiatry/ Paediatrics/ Medical Education/ Nuclear Medicine/Medicine

**Note 1**:

I. *Applications for the above posts will be entertained from the candidates with **MBBS degree** as their first degree*

II. *Applications from candidates with BDS degree can also be considered for the posts in Biochemistry and priority shall be given to MBBS degree holders.*

III. *For the Posts of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary), preference will be given to those who either have or are doing **the postgraduate degree as given below against the subject:***

| | |
|---|---|
| *i. Biochemistry* | a). MD in Medicine/Chemical Pathology<br>b). BDS with Ph.D/M.Phil in Biochemistry |
| *ii. Community & Family Medicine* | a). MD in Community Medicine/Family Medicine / Medical Administration<br>b). Ph.D in Public Health |
| *iii. Microbiology* | a). MD in Medical Microbiology |
| *iv. Parasitology* | a).MD in Medical Parasitology/Microbiology or Doctoral Degree in Parasitology. |
| *v. Forensic Medicine* | a). MD in Forensic Medicine |
| *vi. Pathology* | a). MD in Haematology / MD in Histopathology |
| *vii. Psychiatry* | a). MD in Psychiatry |
| *viii. Paediatrics* | a). MD in Paediatrics |
| *ix. Medical Education* | a). MD in Medical Education |
| *x. Nuclear Medicine* | a). MD in Radiology |
| *xi. Medicine* | a). MD in Medicine -Note- Candidates should pursue their career in Toxicology and Neurosciences/Clinical Genetics |

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details.

**Closing date:**
Applications should reach us on or before the date given below:

**Post of Senior Professor/Professor - 03.12.2025**
**Other posts - 19.11.2025**

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna Collection Account No: **970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications and self-evaluation with supportive documents for the **Post of Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka** as required by the University Grants Commission Circulars No. 5/2015, 5/2015(i) (for Senior Professor), University Grants Commission Circulars 916, 4/2014 and Establishments Circular No. 4/2010 (for Professor), (see http://www .jfn. ac.lk /index. php/circular/) with a covering letter.

Perfected applications for the **other posts** shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referee reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
**18.10.2025**


திருமறைக் கலாமன்ற

## வைரவிழா நிகழ்வுகள் கலைத்தூது கலையகத்தில்

காலநிலை சீரின்மையால் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இரு நாள்களும் இல 238,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் நடைபெறவிருந்த திருமறைக் கலாமன்றத்தின் வைர விழா நிகழ்வுகள் அனைத்தும் இல,286 பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறும் என திருமறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது. (ச-இ)

## சமய பாட ஆசிரியர்களுக்கு மூன்று நாள்கள் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.18

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் தரம் 6 சைவசமயப் பாட ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வு , திருநெல் வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 22, 23, 24 ஆம் திகதிகளில் முறையே புதன், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது. அதேபோன்று தரம் 6 கத்தோலிக்கத் திருமறை, கிறிஸ்தவ பாடங்களுக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வு யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள மறைக்கல்வி நிலையத்தில் எதிர்வரும் 23 ,24, 25ஆம் திகதிகளில் முறையே வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் காலை 7.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணி வரை நடைபெறவுள்ளது. செயலமர்வில் பங்குபற்றாத ஆசிரியர்களுக்கு 2026ஆம் ஆண்டு தரம் 6 இற்கு கல்வி கற்பிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதால் சைவசமயம், கத்தோலிக்கத் திருமறை மற்றும் கிறிஸ்தவ பாடங்களைக் கற்பிக்கவிருக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-25)

## கேதாரகௌரி விரத காப்புப் பூஜை வழிபாடு

கேதாரகௌரி விரத காப்புப் பூஜை வழிபாடும், காப்புக் கட்டுதலும் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் பருத்தித்துறை சிவன் கோவிலில் காலை 9 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி 10.30 மணிக்கு காப்பு வழங்கப்படும். பெட்டிக்காப்புக்கு 1800 ரூபாவும் தனிக் காப்புக்கு 250 ரூபாவும் அறவிடப்படும். காப்பு எடுப்பவர்கள் 20ஆம் திகதிக்கு முன்னதாக பெயர், நட்சத்திரம் என்பவற்றை ஆலயக் காரியாலயத்தில் பதிவுசெய்யுமாறும் ஆலய தேவஸ்தானம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-25,100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 . 10 . 1947 | 15 . 10 . 2025 |



## வல்லிபுரநாதன் ஞானேஸ்வரி

தும்பளை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரநாதன் ஞானேஸ்வரி அவர்கள் 15.10.2025 புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் வல்லிபுரநாதனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்வரத்தினம் தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சின்னையா - பவளத்தின் மருமகளும், ஜெயசீலன், பத்மாசினி, சிவகுமாரன், சாந்தமலர், செல்வராஜன் ஆகியோரின் சகோதரியும், கொங்காதரன் (சுவிஸ்), கீதா ஆகியோரின் தாயாரும், யசோதை (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீராகவி (சுவிஸ்), கோகுல் (சுவிஸ்), ஜெயகிருஷ்ணா, தினேஷ்காந், வினு ஆகியோரின் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (19.10.2025) முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கன்னாபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


(CR 15118) E

தொடர்புகளுக்கு: 077 008 2837, 077 793 8221

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 . 07 . 1949 | 15 . 10 . 2025 |



## சங்கரப்பிள்ளை இரத்தினலிங்கம்


(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர், சுன்னாகம்)

ஈவினை மத்தி புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை இரத்தினலிங்கம் அவர்கள் கடந்த 15.10.2025 புதன்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலம்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், குணேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சவுந்திரம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் மகாலிங்கம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற இராசமணி மற்றும் குணமணியின் பாசமிகு மைத்துனரும், நகுலா (கனடா), சசீலன் (ஆசிரியர், யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), வித்தகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சூரியகுமார் (கனடா), காந்தரூபி (SDO, Kopay), ஸ்ரீவைஸ்ணவி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனிஸ்ரன் (கனடா), யதுஸ்ரன் (கனடா), அபினாஸ் மற்றும் சஷ்மிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் நேமிநாதன் (சுவிஸ்) தணிகைநாதன் (லண்டன்) மதிவண்ணன் (முகாமைத்துவ உதவியாளர், பிரதம செயலாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்) அந்திவண்ணன் (Srikumaran Tex) சக்திவண்ணன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 19/10/2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஈவினையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஈவினை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 077 187 6571

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16.11.1947 | 15.10.2025 |

## சுப்பிரமணியம் தங்கராஜா

(உரிமையாளர் - ராஜ் ஜுவல்லர்ஸ்)

வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தங்கராஜா அவர்கள் கடந்த (15.10.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணி அவர்களின் அன்புக் கணவரும், ரிஜினோல்ராஜ் (ராஜ் ஜுவல்லர்ஸ் - சுன்னாகம்), ரூபேஜ்ராஜ் (ராஜ் ஜுவல்லர்ஸ் - திருநெல்வேலி), ரிஜிதாஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாரணி (பிரதேச செயலகம், உடுவில்), சிவாஜினி, நிர்மலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இந்திராணி, விக்கினராஜா, புஸ்பம், சுவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், மதுரிகா, அஷ்மிகா, வினோஜ்ராஜ், கீர்த்தனா, அனிஷ், பவிஷ், ஆதீஷ் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

64/7 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(C5459686) J-1

தகவல்: குடும்பத்தினர்
077 900 6957
077 663 6384

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரயில் கடவை இன்மையால் போக்குவரத்தில் இடர்பாடு!

## பேசாலை மக்கள் சுட்டிக்காட்டு

**மன்னார், ஒக். 18**

**மன்னார் பேசாலை வடக்கு மற்றும் பேசாலை தெற்குப் பகுதிகளை பிரிக்கும் வகையில் அமைந்துள்ள புகையிரதத்தடத்தைக் கடந்து பயணிப்பதற்கு ஒரேயொரு புகையிரதக்கடவை மாத்திரம் காணப்படுவதால் பலத்த போக்குவரத்து இடர்பாட்டை எதிர்நோக்கி வருவதாக பேசாலை மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



ன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த பகுதி மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பேசாலை தெற்குப் பகுதியிலிருந்து பாத்திமா மத்திய மகாவித்தியாலயம், சென். மேரிஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு வருகை தருகின்ற மாணவர்கள் நீண்டதூரம் பயணம் செய்து பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

அத்தோடு பொதுமக்களும் பலத்த போக்குவரத்து நெருக்கடிகளுக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே இந்தப் போக்குவரத்து நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு பேசாலை பாப்பரசர் வீதியில் புகையிரதக் கடவை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அத்துடன் பேசாலைக் கிராமத்தில் உள்ளக வீதிகளும் சீரமைப்பின்றி மோசமான நிலையில் காணப்படுகின்றன. அவற்றையும் புனரமைத்து எமது போக்குவரத்தை இலகுவாக்கவேண்டும் - என்றனர். (ச-246)

### அரியாலையில்

# கழிவு தரம்பிரிப்பு நிலையம் ஆளுநர் நேரில் ஆராய்வு!


யாழ்ப்பாணம், ஒக். 18

அரியாலை காரைமுனங்குப் பிரதேசத்தில் நல்லூர்ப் பிரதேச சபையால் குப்பைகள் தரம்பிரிக்கும் நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தநிலையில், அந்தப் பகுதியை ஆளுநர் நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அங்கு முன்னெடுக்கப்பட்டுவரும் தரம்பிரிப்பு நடவடிக்கைகளையும் எதிர்காலத்தில் அங்கு முன்னெடுக்கப்படவுள்ள பணிகள் தொடர்பிலும் நல்லூர் பிரதேசசபையின் செயலாளர் ஆளுநருக்கு எடுத்துக்கூறினார். தரம்பிரிக்கும் நடவடிக்கையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 17பேர் ஈடுபட்டுள்ளநிலையில் அவர்களுடனும் ஆளுநர் கலந்துரையாடினார்.

இந்தக் கண்காணிப்புப் பயணத்தின்போது ஆளுநரின் செயலாளர், அந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-27-66)





# இலங்கைக்குக் கடத்தவிருந்த பொருள்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஒக். 18

இலங்கைக்கு படகுமூலம் கடத்துவதற்காக பதுக்கிவைக்கப்பட்டிருந்த பூச்சிக்கொல்லி உரம் மற்றும் அழகுசாதனப் பொருள்கள் இராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதியில் வைத்து கியூ பிரிவுப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்யப்பட்டு இராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியிலிருந்து இலங்கைக்குக் குறித்த பொருள்கள் கடத்தப்படவிருப்பதாக கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கைது இடம்பெற்றது.

பறிமுதல்செய்யப்பட்ட பொருள்களின் இந்திய மதிப்பு 36 இலட்சம் ரூபா எனவும் இலங்கை மதிப்பு ஒரு கோடி ரூபா வரை இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-56)



சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் 37ஆவது ஆண்டு நிறைவு விழா, தெல்லிப்பழை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போது சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் நிறுவுநர் கோகிலா மகேந்திரனால் எழுதப்பட்ட மூன்று நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. (ச-25,66)



தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மீசாலை பொது நூலகத்தினால் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தமர்வு நேற்று வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. இலக்கு நிர்ணயித்தல், தயார்ப்படுத்துதல், உணவுப் பழக்கவழக்கங்கள், சமுதாயமாற்றம், தொழிநுட்பப் பிறழ்வுகள் தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலக மனிதவள அலுவலர்கள் திருமதி நிலாந்தினி மோகனகாந்தன், தீபா கேதீஸ்வரன் ஆகியோர் தெளிவுபடுத்தினர். (ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள்வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்குத் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம்கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். சிலருக்கு வேலை விஷயமாக வெளியில் செல்ல நேரிடும் என்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்துவிடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சிதரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். மற்றவர்களுக்குக் கொடுத்து வராமல் இருந்த கடன் திரும்பக் கிடைக்கக்கூடும்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையே காணப்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காகச் செலவு செய்யவேண்டிவரும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். தந்தைவழி உறவுகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடிவதுடன் அவர்கள்மூலம் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

## அமரர் ராஜனி திராணகமவின் 36ஆவது நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஒக்.18

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி 1989ஆம் ஆண்டுபடுகொலைசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழகத்தின் உடற்கூற்றியல் துறையின் முன்னாள் விரிவுரையாளர் அமரர் கலாநிதி ராஜனி திராணகமவின் 36 ஆவது வருட நினைவுக்கூட்டமும், நினைவுப்பேருரையும் சென். ஜோன்ஸ் த பப்டிஸ்ட் தேவாலயத்தின் பரிஸ் மண்டபத்தில் பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளன. "சமகால உலக ஒழுங்கில் நீதிக்கான சாத்தியம் அல்லது சாத்தியமின்மை" என்ற தலைப்பில் பொருளாதாரத்துக்கான லண்டன் கற்கை நிலையத்தின் பால்நிலைக் கற்கைகள் துறையின் வருகைநிலைப் பேராசிரியரான கிரண் கிரேவல் நினைவுப் பேருரை ஆற்றுவார். இவரின் உரையின் தமிழ்மொழிபெயர்ப்பு வழங்கப்படும். உரையைத் தொடர்ந்து இடம்பெறும் கலந்துரையாடல் ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழிகளில் இடம் பெறவுள்ளது. (ச-25)


## அரியாலையில் வாய்க்கால்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், ஒக்.18

அரியாலைப் பகுதியில் உள்ள வெள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

மாம்பழம் சந்திக்கு அருகிலுள்ள பிரப்பங்குளம் ஊடாகச் செல்லும் வெள்ள வாய்க்கால்களே இவ்வாறு துப்புரவு செய்யப்பட்டன. (ச-25, 17)





## ஆக்கக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.18

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புத்தாக்கக் கழகத்தினால் நடத்தப்பட்ட கண்காட்சி நிகழ்வு கல்லூரி அதிபர் து.திலீப்குமார் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது அனைத்துப் பாடப்பரப்புகள் சார்ந்தும் மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (ச-41)

## முற்றவெளியில் களைகட்டும் தீபாவளி வியாபாரம்

யாழ்ப்பாணம், ஒக். 18

தீபாவளித் திருநாளை முன்னிட்டு யாழ். முற்றவெளியில் நடைபாதை வியாபாரத்துக்கென இடம் ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளது. தெற்கிலிருந்து அநேகமான வியாபாரிகள் வருகைதந்து அங்கு தற்காலிக வியாபாரக் கொட்டகைகளை அமைத்து வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-25, 17)

## மரண அறிவித்தல்



**நவரத்தின ஐயர் கோடீஸ்வர ஐயர்**

கீரிமலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தின ஐயர் கோடீஸ்வர ஐயர் அவர்கள் நேற்று (17.10.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தின ஐயர் - இராசேஸ்வரி அம்மாதம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செந்தூர் செல்வி அம்மாவின் பாசமிகு கணவரும், பரமேஸ்வரன், உமாபதிஸ்வரக்குருக்கள் (சூட்டி ஐயா), இரத்தினேஸ்வரி (கனடா), விக்கினேஸ்வரன் (வலயக்கல்வி பணிமனை மருதனார்மடம்), வித்தியானந்தன் (கிளிநொச்சி), மங்களேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கீரிமலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (18.10.2025) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சகோதரன் (ந. பரமேஸ்வரன்)
கீரிமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபானக்...

எது. தீபாவளி தினத்தன்று மதுபான விற்பனை நிலையங்களை மூடுமாறு, இந்து அமைப்புகளால் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையிலேயே, தீபாவளி தினத்தன்று வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-66)

## வடக்கில்...

வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

வடமாகாணத்தில் தற்போது நிலவி வரும் மழையுடனான காலநிலை தொடர்வதற்குச் சாத்தியங்கள் உள்ளன. தற்போது குமரிக் கடலுக்கு அண்மித்ததாக நிலவுகின்ற காற்றுச் சுழற்சியின் விளைவாக நாட்டின் பல பகுதிகளுக்கும் தொடர்ச்சியான மழை கிடைத்து வருகின்றது. எதிர்வரும் 23ஆம் திகதி வங்காள விரிகுடாவில் புதிய தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. தற்போதைய மாதிரிக் கணிப்புக்களின் அடிப்படையில் இந்த தாழமுக்கமானது ஒரு புயலாக வலுப்பெற்று அல்லது ஒரு வலுக் குறைந்த புயலாக மாற்றம்பெற்று இந்தியாவின் ஆந்திராவில் நெல்லூருக்கு அருகில் கரையைக் கடக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த் தாழமுக்கத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நேரடிப் பாதிப்புகள் எவையும் இல்லை. ஆனால், மழையுடனான காலநிலை தொடர்வதற்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்குக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். ஆதலால், மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் நவம்பர் மாதத்தின் முதலாவது வாரத்திலும் தாழமுக்கம் ஏற்படுவதற்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன - என்றுள்ளது. (அ-ம-26-66)

## மீனவர்...

வுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவருக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையில் நேற்று மாலை கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன்போதே, இரு நாடுகளின் மீனவர்களின் விவகாரம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மீனவர்களின் விவகாரங்களுக்கு மேலதிகமாக, கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல், புதுமை, அபிவிருத்தி, பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் அண்டை நாடான இலங்கையுடன் உறவை வலுப்படுத்துவதிலும், செழிப்பை மேம்படுத்துவதிலும் அக்கறையுடன் உள்ளது என்று பிரதமர் ஹரிணியுடனான சந்திப்புத் தொடர்பில் பிரதமர் மோடி கருத்துத் தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

## செவ்வந்திக்கு...

நீதிமன்ற அனுமதிக்கு அமைய, இஷாரா செவ்வந்தி தற்போது தடுப்பில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார். இதன்போது, அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களுக்கு அமையவே மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கொலைச்சம்பவம் இடம்பெற்ற பின்னர் 2 மாதங்கள் வரை செவ்வந்தி மத்துகம மற்றும் மித்தெனிய பகுதிகளில் தலைமறைவாகி இருந்துள்ளார். அதன்பின்னரே வெளிநாடு சென்றுள்ளார். உள்ளூராட்சித் தேர்தல் நடந்த மே மாத காலப் பகுதியிலேயே அவர் வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்றுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் இருந்தபோது தமிழினி என்ற பெயரிலேயே அவர் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். அந்த பெயரில் அடையாள அட்டையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஜே.கே. பாய் என்பவரே இதற்கு உதவியுள்ளார். அவர் நேபாளத்தில் இருந்து ஐரோப்பிய நாடொன்றுக்கு தப்பிச் செல்வதற்குரிய ஏற்பாடுகளும் இடம்பெற்றிருந்தன என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## திருக்கேதீச்சர...

காக எடுக்கப்பட்டது. பத்துப் பேருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்த காரணத்தால், ஒன்பது பேருக்கு எதிரான விசாரணைகளே இவ்வாறு முன்னெடுக்கப்பட்டன.

முதலாவது சாட்சி சாட்சியம் வழங்கும் போது, 'குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களுக்கும் மேலதிகமாகப் பலர் திருக்கேதீச்சர வளைவு உடைப்பில் ஈடுபட்டனர்' என்று குறிப்பிட்டார். இதையடுத்தே, குற்றப்பத்திரிகையில் உள்ள குறைபாடு காரணமாக நீதவான் வழக்கு விசாரணைகளை இடைநிறுத்தினார். வளைவு உடைப்பில் ஈடுபட்ட ஏனையவர்களும் அடையாளம் காணப்பட்டு அனைவருக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும். இல்லையேல், 'குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் வேறு நபர்களும்' என்று குற்றப்பத்திரிகை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று நீதவான் அறிவுறுத்தினார். அத்துடன் வழக்கு விசாரணைகள் 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. (அ-ம-213)

## பேருந்துடன்...

படுகாயமடைந்தார். நேற்று நண்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை நோக்கி சைக்கிளில் பயணித்த இளைஞர், நிலைதடுமாறி வலது பக்கமாக விழுந்தபோதே, பேருந்து அவரை மோதித் தள்ளியுள்ளது. இதையடுத்து, படுகாயமடைந்த இளைஞர் பொதுமக்களால் உடனடியாக மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

மரண வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோதே, அந்த இளைஞர் விபத்தில் சிக்கியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100)

## நல்லூர்...

யின் ஒருபகுதி கடந்த மாத நடுப் பகுதியில் பெய்த கனமழை காரணமாகத் திடீரென இடிந்து விழுந்தது. ஏனைய பகுதிகளும் எதிர்வரும் மழைக்காலத்தில் இடிந்துவிழும் நிலையே காணப்பட்டன.

நல்லூர் மந்திரிமனை அமைந்துள்ள காணி தனியாருடையது என்பதால், அங்கு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாதிருந்த நிலையில், காணி உரிமைகளின் அனுமதியுடன், மந்திரிமனையைப் பாதுகாக்க தற்போது சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, நல்லூர் மந்திரிமனையின் முன்னரங்கப் பகுதியில் காணப்பட்ட மரத்தினால் ஆக்கப்பட்ட நிலைகள் மற்றும் கூரைகள் அகற்றப்பட்டுள்ளன. அகற்றப்பட்ட பொருள்களை மழைகாலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொல்பொருள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66-26-20)

## தையிட்டி...

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

வரலாற்றுச் சிறப்புமிக்க திஸ்ஸ விகாரை தேவநம்பியதிஸ்ஸ மன்னனின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. அது பின்னர் பாழடைந்த நிலைக்குச் சென்றது. எனினும், அந்த விகாரை 1950ஆம் ஆண்டுகளில் மீளவும் அமைக்கப்பட்டு 1959ஆம் ஆண்டு வரை முறையாகப் பராமரிக்கப்பட்டது. இதற்கும், முன்னைய காலத்தில் இந்த விகாரை பரந்து விரிந்த பரப்பளவில் அமைந்திருந்தது என்பதற்கும் நம்பத்தகுந்த ஆதாரங்கள் தற்போதும் உள்ளன.

1958ஆம் ஆண்டு நில அளவைத் திணைக்களம் வெளியிட்ட வரைபடங்களில் 20 ஏக்கர் பரப்பளவு விகாரைக்காக ஒதுக்கப்பட்டது. விகாரையுடன் பழமையான குளமும் இருந்தது. தற்போது அந்தக் குளம் கோவில் எல்லைக்கு வெளியே அமைந்துள்ளது. விகாரை கைவிடப்பட்ட நிலைக்குச் சென்றதால், 1971ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தித் திட்டத்தில் அந்த இடம் கைவிடப்பட்ட விகாரை என்று குறிப்பிடப்பட்டது.

1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட போர் காரணமாக, அந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்தனர். இதன் போது, விகாரையும் அதைச்சுற்றியுள்ள ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பும் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டன. 2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர், 2018ஆம் ஆண்டு விகாரை நிலம் அடையாளம் காணப்பட்டு, திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டது. இராணுவத்தின் ஒத்துழைப்புடனேயே கட்டுமானப் பணிகள் இடம்பெற்றன.

2019ஆம் ஆண்டு தொடக்கம் 2025ஆம் ஆண்டுவரை திஸ்ஸ விகாரையில் விரிவான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டு அப்போதைய பிரதேசசெயலர் சிவஸ்ரீ விகாரைக் காணிகளில் ஒரு பகுதியை மக்களின் குடியேற்றத்துக்காக வழங்கினார். இதனால், 2024ஆம் ஆண்டு, நில அளவைத் துறை மறுமுறை அளவீடு செய்ததில் 14 ஏக்கர் மற்றும் 5.97 பேர்ச் நிலப்பரப்பே விகாரைக்குச் சொந்தமானது என்று உறுதிப்படுத்தப்பட்டது. இது 1959ஆம் ஆண்டு குறிக்கப்பட்ட நிலப்பரப்பை விட குறைவாக இருந்தாலும், எஞ்சியுள்ள நிலப்பரப்பைப் பாதுகாக்கும் வகையில் தற்போதைய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுதந்திரத்துக்குப் பின்னர், வடமாகாணத்தின் முதலாவது தமிழ்ப் பௌத்த பாடசாலை திஸ்ஸ விகாரையை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம். தற்போது நூற்றுக் கணக்கான மக்கள் திஸ்ஸ விகாரைக்கு வருவதால், அங்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அந்தப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோருகின்றோம். அத்துடன், ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து விகாரையைப் பாதுகாத்துத் தருமாறும் கேட்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## போதைப்...

எம்.கோணேஸ்வரனின் உத்தரவுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே போதைப் பொருள்களுடன் பத்துப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து கஞ்சா, போதை மாத்திரை, மாவா உள்ளிட்ட போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (அ-ம-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Anniversary Day Celebration

# வீனஸ் விசேட வைத்தியசாலை

## மாபெரும் இலவச நோய்கண்டறியும் பரிசோதனைகள்

**தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெறும்.**

அண்மைக்காலங்களில் ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன் என்று பாராது அதிகரித்து வரும் தொற்றா நோய்களின் (மாரடைப்பு, கொலஸ்ரோல், பாரிசவாதம், நீரிழிவின் பக்கவிளைவுகள்) எதிர்பாராத மரணங்கள் எம்மை வேதனையடையச் செய்கின்றது. இவற்றை தடுக்கும் முகமாக வீனஸ் விசேட வைத்தியசாலையானது மக்களுடன் இணைகிறது.

இந் நோய்களானது மருத்துவ துறை சார்ந்தவருக்கோ,விஞ்ஞானதுறை சார்ந்தவருக்கோ, விவசாயிகளுக்கோ அல்லது கூலி தொழிலாளிக்கோ விதி விலக்கல்ல. இது யாரையும் எந்த நேரத்திலும் காவு கொள்ளலாம்.
நீங்கள் உங்கள் உடல் நலத்தினை சரிவர கவனிக்க தவறின் இவ் நோய்கள் தங்கள் கங்கரியத்தை காட்டும்.
ஏழை பணக்காரன் என வித்தியாசம் பார்க்காமல் உயிரைக்கொல்லும்.

இவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு நோய் தாக்க ஆபத்தில் உள்ளவர்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து உயிர் காக்கும் முகமாக இம் மாபெரும் இலவச இரத்த பரிசோதனைகளும் வைத்திய ஆலோசனைகளையும் ஆரம்பித்துள்ளோம். 40 வயதுக்கு மேற்பட்டோர் இவ் வாய்ப்பினை பயன்படுத்தி உங்கள் உடல் சுகாதாரத்தினை பாதுகாக்கும் இலவச பரிசோதனைகளை மேற்கொள்ளலாம்.

**இலவசமாக வழங்கப்படும் பரிசோதனைகள்:**
- LIPID PROFILE
  - TOTAL CHOLESTEROL
  - HDL CHOLESTEROL
  - LDL CHOLESTEROL
  - TRIGLYCERIDES
- FASTING BLOOD SUGAR (FBS)
- BLOOD PRESSURE

நாள்: 19.10.2025 முதல் 25.10.2025 வரை
இடம்: வீனஸ் விசேட வைத்தியசாலை,

குறிப்பு:
பரிசோதனைகளைச் செய்வதற்கு முன் 10-12 மணித்தியாலங்கள் உணவு/தேநீர் அருந்தாமல் வரவும்.

இவ் வைத்திய சேவையில் கலந்து கொள்ள விரும்புவோர், உங்கள் பெயர், முகவரி மற்றும் வயது ஆகிய விவரங்களை வாட்ஸ்அப் மூலம் கீழே உள்ள தொலைபேசி எண்ணிற்கு அனுப்பவும்.
நீங்கள் பரிசோதனைக்கு வரவேண்டிய நேரம் நாங்கள் அறியத்தருவோம்.

வாட்ஸ்அப் மூலம் பதிவு செய்ய: 0706986832

## இந்நிகழ்வுகளை சிறப்பிக்கும் முகமாக
- பிள்ளையார் பூஜை
- விளக்கேற்றல்
- இரத்ததான முகாம்
- இலவச இரத்த பரிசோதனைகள்

## இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக

முன்னைய நாள் - மருத்துவ பீட பீடாதிபதியும், யாழ் பல்கலைக் கழக துணை வேந்தரும், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு உறுப்பினருமான

சிரேஷ்ட பேராசிரியர் **செல்வி வசந்தி அரசரட்ணம்**
அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

எமதுவைத்திய சேவைக்கு உறுதுணையாய் இருந்த மதிப்பிற்குரிய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையாளர்கள் அனைவருக்கும் இந்த பொன்னான நாளில் நன்றி தெரிவிக்கின்றோம்.

## குருதி கொடை நிகழ்வு

**இந் நன்நாளில் இன்னோர் உயிர்காக்கும் நிகழ்வாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் குருதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு,**
எமது வீனஸ் வைத்தியசாலை பணியாளர்கள், ஊழியர்களின் இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

**ஒரு துளி கொடுத்து உயிர் காப்போம்**

எனும் தொனிப்பொருளில் இடம்பெறும் இந் நிகழ்வில் நீங்களும் விரும்பியவர்கள் இரத்ததானம் செய்து மற்றவர் உயிர் காக்க உதவுவதோடு வீனஸ் வைத்தியசாலையினால் வழங்கப்படும் குருதிக்கொடை சான்றிதழினையும் அன்பளிப்பு பொருட்களையும் பெற்றுக்கொள்ளவும்.
19.10.2025 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 09.00 மணி முதல்
வீனஸ் விசேட வைத்தியசாலை
**இல.136, பலாலி வீதி, கந்தர்மடம் , யாழ்ப்பாணம்.**
இரத்த தானம் செய்ய விரும்புவோர் இவ் இலக்கத்தை தொடர்பு கொள்ளவும் : 077 - 8461053


# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 07 . 1972
மறைவு 16 . 10 . 2025

## சுபாஷினி சுவாமிநாதன்

வினாசித்தம்பி வீதி கோவில்குடியிருப்பு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுபாஷினி சுவாமிநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் மகளும் , காலஞ்சென்ற முருகேசபிள்ளை மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் மருமகளும், சுவாமிநாதனின் அன்பு மனைவியும், வைஷ்ணவன் (தொழில்நுட்பபீட பட்டதாரி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), வைதேகி (மாணவி சுண்டுக்குழி மகளீர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபோட்ரஞ்ஜன் (லண்டன்), சித்திராஞ்ஜன் (கனடா) பாசமிகு சகோதரியும், அனுஷாஞ்சலி, சுபாஜினி காலஞ்சென்ற கௌரி மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும், கேஷ்ணா, ஹமித்தா, கதிர்ஜினி, ரவிபிரசாத், ஷங்கவி, நிகேஷ் ஆகியோரின் அத்தையும், இனயா, ஈழநிலா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வினாசித்தம்பி வீதி,**
**கோவில்குடியிருப்பு,**
**சாவகச்சேரி.**

(CS/46128) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 227 0497**

# மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 12 . 1951
மறைவு 14 . 10 . 2025

## அமரர் தேவராசா சறோஜினிதேவி (தேவி)

சுதுமலை தெற்கு, சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தேவராசா சறோஜினிதேவி (தேவி) அவர்கள் கடந்த (14.10.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - கண்மணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், தேவராசா (தெய்வம் - இலங்கராசா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், அகிலரூபன், கௌரீசன், துஷ்யந்தினி, தினேஷன் (பிரான்ஸ்), கௌசிகா ஆகியோரின் அன்பு தாயாரும், சந்தானரூபி (பிரான்ஸ்), சரணியா, விக்கினரூபன் (பிரதிப் பரீட்சை ஆணையாளர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், கொழும்பு), மிறோஜினி (பிரான்ஸ்), ஸ்ரீபிரசாத் (பிராந்திய முகாமையாளர் CVS one Pvt Ltd) ஆகியோரின் அன்பு மாமியாரும், யதிகன், கேசிகன், தணிகைகுமரன், அக்ஷரன், அபிநயா, யுவாசினி, ஆதிரன், ஆதித்தியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான குணபாலு, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, குணசிங்கம், நாகேஸ்வரி, கணேசு மற்றும் பராசக்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள இல்லத்தில் நாளை (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கொக்குவில் மேற்கு**
**கொக்குவில்**

(CS/59688) J-1

**தகவல்:**
**நா. தேவராசா (கணவர் - தெய்வம்)**
**077 278 8296**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org